ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2363/26 - 2023 දෙසැම්බර් මස 20 වැනි බදාදා - 2023.12.20

2363/26 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 20 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்**

22 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் (சட்டம்) 22 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்ரமசிங்க ஆகிய நான், இக்கட்டளையின் மூலம்,

(i) 2021 ஆம் ஆண்டின் பெப்புருவரி 03 ஆந் திகதியிடப்பட்ட 2213/ 36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க ஒழுங்குவிதிகளின் (இதனகத்துப் பின்னர் "2021 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க ஒழுங்குவிதிகள்" என குறிப்பீடு செய்யப்படும்) அட்டவணையின் பகுதி I இல் வழங்கப்பட்ட பொதுவான அனுமதியின் கீழ், முதற்தடவையாக புலம்பெயர் கொடுப்பனவைக் கோருகின்ற புலம்பெயர்ந்தவர்களுக்கான தகைமையுடைய புலம்பெயர் கொடுப்பனவை உயர்ந்தபட்சம் ஐ. அ. டொலர் 50,000 அல்லது ஏதேனும் வேறு பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை மட்டுப்படுத்துகின்றேன்.

(ii) இக்கட்டளையின் திகதியளவில், 2021 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்ட பொதுவான அனுமதியின் கீழ் ஏற்கனவே புலம்பெயர் கொடுப்பனவைக் கோரியுள்ள புலம்பெயர்ந்தவர்களினால் மூலதனக் கொடுக்கல் வாங்கல் ரூபா கணக்குகளூடாக புலம்பெயர் கொடுப்பனவின் கீழ் நிதியங்களைச் சொந்த நாட்டிற்குத் திருப்பி அனுப்புவதை உயர்ந்தபட்சம் ஐ.அ. டொலர் 20,000 அல்லது ஏதேனும் வேறு பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை மட்டுப்படுத்துகின்றேன்.

(iii) 2021 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க ஒழுங்குவிதிகளில் வழங்கப்பட்ட பொதுவான அனுமதியின்கீழ் இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியில் வதிகின்ற அத்துடன் வேறொரு நாடொன்றில் தற்காலிக வதிவிட வீசாவைப் பெற்றுக்கொண்டுள்ள எவரேனும் தனிப்பட்ட இலங்கையருக்கான வெளிமுகப் பணவனுப்பல்களை அல்லது வெளிநாட்டுச் செலாவணி வழங்கலை ஆளொருவருக்கு உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 20,000 அல்லது ஏதேனும் வேறு பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை மட்டுப்படுத்துகின்றேன்.

1A - PG 6576 — 406 (2023/12)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(iv) *2021 ஆம் ஆண்டின் பெப்புருவரி 03 ஆந் திகதியிடப்பட்ட 2213/ 37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க ஒழுங்குவிதிகளின் அட்டவணையில் வழங்கப்பட்ட பொதுவான அனுமதியின் கீழ் வேறொரு நாட்டின் தற்காலிக வதிவிட வீசாவின் கீழ் இலங்கையிலிருந்து செல்வதற்கு உத்தேசிக்கின்ற இலங்கையில் வதிகின்ற எவரேனும் ஆளுக்கான வெளிநாட்டுச் செலாவணி வழங்கலை ஆளொருவருக்கு உயர்ந்தபட்சம் ஐ.அ. டொலர் 10,000 அல்லது ஏதேனும் வேறு பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை மட்டுப்படுத்துகின்றேன்.*

(v) *2021 ஆம் ஆண்டின் பெப்புருவரி 03 ஆந் திகதியிடப்பட்ட 2213/ 34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஒழுங்குவிதிகளின் (இதனகத்துப் பின்னர் 2021 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஒழுங்குவிதிகள் எனக் குறிப்பீடு செய்யப்படும்) அட்டவணையில் வழங்கப்பட்ட பொதுவான அனுமதியின் கீழ் இலங்கையில் வதிகின்ற ஆட்களினால் வெளிநாடுகளில் முதலீடுகளை மேற்கொள்கின்ற நோக்கத்திற்காக பின்வருவன நீங்கலாக, வெளிமுக முதலீட்டுக் கணக்குகள் ஊடாக கொடுப்பனவுகளை மேற்கொள்வதை இடைநிறுத்துகின்றேன் :*

(அ) *சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கைக்கு வெளியில் வதிகின்ற ஆளொருவரிடமிருந்து முதலீட்டாளரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடனொன்றிலிருந்து நிதியளிக்கப்படவுள்ள முதலீடுகள், அல்லது*

(ஆ) *சட்டத்தின் அல்லது நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு, இணங்கி முதலீட்டினைப் பெறுபவரின் நாட்டிலுள்ள கம்பனியொன்றில் அல்லது கிளை அலுவலகமொன்றில் ஏற்கனவே செய்யப்பட்ட முதலீடு மீது பிரயோகிக்கப்படக்கூடிய அந்நாட்டின் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்படுத்தலினை நிறைவு செய்வதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய மேலதிக முதலீடொன்று, அல்லது*

(இ) *முதலீட்டினைப் பெறுபவரின் தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகள் நோக்கத்திற்காக, உயர்ந்தபட்சம் ஐ.அ. டொலர் 30,000 அல்லது ஏதேனும் வேறு பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை சட்டத்தின் அல்லது நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குட்பட்டு வெளிநாடுகளில் ஏற்கனவே தாபிக்கப்பட்ட துணை நிறுவனங்களில் அல்லது கூட்டிணைக்கப்பட்ட/ பதிவுசெய்யப்பட்ட கிளை அலுவலகங்களில் தகைமையுடைய வதியும் கம்பனிகளினால் மேற்கொள்ளப்படவுள்ள நிதியங்களின் மேலதிக முதலீடு/ மேலதிக உட்செலுத்தல் (ஏற்புடையவாறு), அல்லது*

(ஈ) *தகைமையுடைய வதியும் கம்பனிகளால் சட்டத்தின் அல்லது நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குட்பட்டு வெளிநாட்டில் ஏற்கனவே தாபிக்கப்பட்ட தொடர்புபடுத்தல், சந்தைப்படுத்தல், முகவராண்மை, கருத்திட்டம், பிரதிநிதி அல்லது வேறு ஏதேனும் அதனையொத்த அலுவலகங்களின் பராமரிப்பு நோக்கத்திற்காக உயர்ந்தபட்சம் ஐ.அ. டொலர் 30,000 அல்லது ஏதேனும் வேறு பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரையான பணவனுப்பல்கள், அல்லது*

(உ) *தமது மையத் தொழிலை வெளிநாடுகளுக்கு விரிவுபடுத்தும் நோக்கத்திற்காக இலங்கைக்கு வெளியில் உள்ள கம்பனியொன்றின் சாதாரண பங்குகளில் பின்வரும் தகைமையுடைய முதலீட்டாளர்கள் மூலமான முதலீடுகள் :*

(i) *கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட கம்பனிகள் - ஐ.அ. டொலர் 200,000 அல்லது ஏதேனும் வேறு பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை கொண்ட வரையறை வரை, அல்லது*

(ii) *கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்படாத கம்பனிகள் - ஐ.அ. டொலர் 100,000 அல்லது ஏதேனும் வேறு பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை கொண்ட வரையறை வரை.*

(ஊ) *வெளிநாடுகளில் அலுவலகங்களைத் தாபிப்பதற்கு இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் மூலமான முதலீடுகள், ஐ.அ. டொலர் 100,000 அல்லது ஏதேனும் வேறு பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை கொண்ட வரையறை வரை ;*

(எ) *தகைமையுடைய வதிகின்ற தனிப்பட்ட தனியாள் ஒருவர் மூலம் ஊழியர் பங்கு சொத்தாண்மைத் திட்டமொன்றின் அல்லது ஊழியர் பங்குத் தெரிவுத் திட்டமொன்றின் பங்குகளின் முதலீடு ;*

*ஆயின், இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் தலைவர் அத்தகைய தேவைப்படுத்தலினை நிறைவு செய்தல் பற்றி திருப்தியடைய வேண்டும்.*

(vi) அவர்களது மையத் தொழிலை வெளிநாடுகளில் விரிவுபடுத்தும் நோக்கத்திற்காக, இலங்கையில் வதிகின்ற ஆளொருவரின் மூலம் வைத்திருக்கப்படுகின்ற வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் ஊடாக மூலதனக் கொடுக்கல்வாங்கல் மீதான வெளிமுகப் பணவனுப்பல்களை உயர்ந்தபட்சம் ஐ.அ. டொலர் 100,000 அல்லது ஏதேனும் வேறு பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை மட்டுப்படுத்துகின்றேன்.

(vii) இலங்கையில் வதிகின்ற ஆளொருவரினால் வைத்திருக்கப்படுகின்ற தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகள் ஊடாக மூலதனக் கொடுக்கல்வாங்கல் மீதான வெளிமுகப் பணவனுப்பல்களை உயர்ந்தபட்சம் ஐ.அ. டொலர் 20,000 அல்லது ஏதேனும் வேறு பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை மட்டுப்படுத்துகின்றேன்.

(viii) 2021 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஒழுங்குவிதிகளின் வழங்கப்பட்ட பொதுவான அனுமதியின் கீழ் குறித்துரைக்கப்பட்ட வரையறைகளை விஞ்சுகின்ற முதலீடுகளுக்காக விடயத்திற்கு விடயம் என்ற அடிப்படையில் சட்டத்தின் 7(10) ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம் அனுமதி வழங்குவதற்கு இலங்கை மத்திய வங்கி அதிகாரத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். ஆயின்,

(அ) முன்மொழியப்பட்ட முதலீடானது சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவரிடமிருந்து முதலீட்டாளரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன் ஒன்றிலிருந்து நிதியளிக்கப்படுவதாக இருத்தல், அல்லது

(ஆ) முன்மொழியப்பட்ட முதலீடானது சட்டத்தின் அல்லது நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க முதலீட்டினைப் பெறுபவரின் நாட்டிலுள்ள கம்பனியொன்றில் அல்லது கிளை அலுவலகமொன்றில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட முதலீடு மீது ஏற்புடைய அந்நாட்டின் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாட்டினை நிறைவு செய்வதற்கு மேற்கொள்ளப்பட வேண்டியதாக இருத்தல்.

2. இக்கட்டளையின் நோக்கத்திற்காக, ''மையத் தொழில்'' என்பது, கம்பனியின் கணக்காய்வாளரினால் உறுதிப்படுத்தப்பட்டதன் படி, கம்பனியின் வருவாயின் முக்கிய மூலமாகக் கருதப்படக்கூடிய கம்பனியொன்றின் தொழில் நடவடிக்கை என்பது பொருளாகும்.

3. 2023 ஆம் ஆண்டு யூன் 28 ஆந் திகதியிடப்பட்ட 2338/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட கட்டளையின் (i) மற்றும் (ii) பந்திகளின் கீழ் ஏற்கனவே புலம்பெயர் கொடுப்பனவினைக் கோரியுள்ள புலம்பெயர்ந்தவர்கள் இக்கட்டளையின் கீழ் புலம்பெயர் கொடுப்பனவைக் கோருவதற்கு மீண்டும் அனுமதியளிக்கப்படாதிருத்தல் வேண்டும்.

4. 2023 ஆம் ஆண்டு யூன் 28 ஆந் திகதியிடப்பட்ட 2338/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட கட்டளையின் (iii) மற்றும் (iv) பந்திகளின் கீழ் ஏற்கனவே வெளிமுகப் பணவனுப்பல்களை மேற்கொண்டுள்ள எவரேனும் ஆள் இக்கட்டளையின் கீழ் வெளிமுகப் பணவனுப்பல்களை மேற்கொள்வதற்கு மீண்டும் அனுமதியளிக்கப்படாதிருத்தல் வேண்டும்.

5. 2023 ஆம் ஆண்டு யூன் 28 ஆந் திகதியிடப்பட்ட 2338/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட கட்டளையின் (v), (vi) மற்றும் (vii) பந்திகளின் கீழ் ஏற்கனவே வெளிமுகப் பணவனுப்பல்களை மேற்கொண்டுள்ள தகைமையுடைய எவரேனும் வதிகின்ற முதலீட்டாளர் இக்கட்டளையின் கீழ் வெளிமுகப் பணவனுப்பல்களை மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும். ஆயின், மேற்சொல்லப்பட்ட கட்டளை அத்துடன் இக்கட்டளை இரண்டின் கீழும் அத்தகைய வெளிமுகப் பணவனுப்பல்களின் திரண்ட தொகை மேற்சொல்லப்பட்ட கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட உயர்ந்தபட்ச வரையறைகளை விஞ்சாதிருக்க வேண்டும்.

6. இக்கட்டளையானது, இக்கட்டளைத் திகதியிலிருந்து ஆறு மாதங்களைக் கொண்ட காலப்பகுதிக்கு செல்லுபடியானதாகும். 2023 ஆம் ஆண்டு யூன் 28 ஆந் திகதியிடப்பட்ட 2338/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட கட்டளை மேலே 5 ஆம் பந்திக்கு பங்கமின்றி இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

கொழும்பு,
2023, திசெம்பர் 19.

EOG 12-0312

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.